# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## மானியக் கோரிக்கை எண் – 49

## அறிவிப்புகள்
## 2020–2021

**கே.ஏ. செங்கோட்டையன்**
பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அறிவிப்புகள் 2020–2021

## 1. கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கில் உள்ள செயற்கை இழை தடகள ஓடுபாதையை ரூ.6.50 கோடி செலவில் புதுப்பித்தல்.

தற்போது, தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான தடகளப் போட்டிகள் செயற்கை இழை தடகள ஓடுபாதைகளில் மட்டுமே நடத்தப்படுகிறது. கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கில் தற்போது உள்ள செயற்கை இழை தடகள ஓடுபாதை தொடர் பயன்பாடு மற்றும் தேய்மானம் காரணமாக பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கில் உள்ள செயற்கை இழை தடகள ஓடுபாதை **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.6.50 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

## 2. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.2.97 கோடி செலவில் பாரம்பரிய மற்றும் சாகச விளையாட்டுகளுக்கான மையம் அமைத்தல்

ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் சேர்க்கப்பட்டுள்ள பாரம்பரிய மற்றும் சாகச விளையாட்டுகளான வில்வித்தை, பாறை ஏறுதல் மற்றும் படகோட்டுதல் போன்றவற்றில் ஈடுபடும் விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மேம்படுத்த, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய மற்றும் சாகச விளையாட்டுகளுக்கான மையம் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.2.97 கோடி செலவில் அமைக்கப்படும்.

## 3. தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் பயிற்சிக்காக ரூ.90.00 இலட்சம் செலவில் 50மீ துப்பாக்கி சுடுதல் பயிற்சி மையம் அமைத்தல்

தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் பயிற்சி மேற்கொள்ள பிரத்யேகமான 50மீ துப்பாக்கி சுடுதல் மையம் இன்றியமையாததாகும். எனவே, மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் 50மீ துப்பாக்கி சுடுதல் பயிற்சி மையம் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.90.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 4. ரூ.1.20 கோடி செலவில் மதுரை மாவட்டத்தில் தேசிய மாணவர் படையின் விமானப்படை அணியை நிறுவுதல்

தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் விமானப்படை பயிற்சிக்காக சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் விமானப் படை அணி நிறுவப்பட்டுள்ளது. தென் மாவட்டங்களிலுள்ள தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் விமானப்படை பயிற்சி பெற ஏதுவாக மதுரை மாவட்டத்தில் தேசிய மாணவர் படையின் விமானப்படை அணி **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.1.20 கோடி செலவில் நிறுவப்படும்.

## 5. பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில், ரூ.2.00 கோடி செலவில் நிர்வாக அலுவலகம் மற்றும் தங்குமிட வசதிகள் கட்டுதல்.

பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுவதால் தங்குமிட வசதிகள் தேவைப்படுகின்றது. இந்த விளையாட்டு வளாகத்தில் நிர்வாக அலுவலகப் பகுதியானது திறந்தவெளி விளையாட்டரங்கத்தில், பார்வையாளர் மாடத்தின் கீழ் தாழ்வான பகுதியில் உள்ளதால் மழைக்காலத்தில் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே, பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில், நிர்வாக அலுவலகம் மற்றும் தங்குமிட வசதிகள் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.2.00 கோடி செலவில் அமைக்கப்படும்.

## 6. இராமநாதபுரம் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள விளையாட்டு விடுதி கட்டடத்தில் ரூ. 35.31 இலட்சம் செலவில் தங்குமிட வசதி அமைத்தல்

இராமநாதபுரத்தில் உள்ள விளையாட்டு விடுதி முழுமையாக செயல்படுவதற்கு தங்குமிடம், படிப்பதற்கான அறை, சமையலறை மற்றும் உணவு அருந்தும் கூடம் ஆகிய வசதிகளை அமைப்பது அவசியம். எனவே, இராமநாதபுரத்தில் உள்ள விளையாட்டு விடுதியில் மேற்குறிப்பிட்ட வசதிகள் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.35.31 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 7. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்திற்கு ரூ.97.13இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் அமைத்தல்

பார்வையாளர் மாடத்துடன் கூடிய திறந்தவெளி விளையாட்டரங்கம், 400மீ தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம், கூடைப்பந்து ஆடுகளம், கையுந்துபந்து ஆடுகளம், இறகுப்பந்து ஆடுகளம், உடற்பயிற்சிக் கூடம், இறகுப்பந்து உள்ளரங்கம் மற்றும் நீச்சல் குளம் ஆகிய விளையாட்டு வசதிகளைக் கொண்ட திருவள்ளூர் மாவட்ட விளையாட்டு வளாகத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம். எனவே, திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தினைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.97.13 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

## 8. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.5.10 கோடி செலவில் பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்துகிறது மற்றும் விளையாட்டுப் போட்டிகளுக்கான அணிகளை தயார் செய்கிறது. போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாத காரணத்தால் அணிகள் பயிற்சிக்கு வெளியே செல்லும் நிலை உள்ளது. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.5.10 கோடி செலவில் அமைக்கப்படும்.

## 9. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.2.90 கோடி செலவில் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் அமைத்தல்

மாற்றுத்திறனாளிகள் விளையாடவும் பயிற்சி பெறவும் போதிய வாய்ப்பு கிடைப்பதில்லை. எனவே, பல்வேறு நிலையிலான விளையாட்டுப் போட்டிகளில் மாற்றுத்திறனாளிகள் சாதனை படைக்க ஏதுவாக அவர்களின் திறமைகளை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.2.90 கோடி செலவில் அமைக்கப்படும்.

## 10. தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் பயிற்சிக்காக ரூ.60.00 இலட்சம் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட 15 விளையாட்டுப் பயிற்சி துப்பாக்கிகள் கொள்முதல் செய்தல்

தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கான தேசிய அளவிலான போட்டிகளில் துப்பாக்கி சுடும் போட்டி முக்கியமானதாகும். எனவே, சென்னை– 'A' மற்றும் 'B', கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய தொகுதி தலைமையிடங்களில் உள்ள தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் பயிற்சிக்காக இறக்குமதி செய்யப்பட்ட 15 விளையாட்டுப் பயிற்சி துப்பாக்கிகள் மற்றும் இதர சாதனங்கள் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.60.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

## 11. கல்லூரி செல்லும் விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு ரூ.16.27 இலட்சம் செலவில் விளையாட்டு விடுதி வசதிகள் அளித்தல்

வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ள தனிநபர் விளையாட்டுகளான வில்வித்தை, வாள் சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ், நீச்சல் மற்றும் டேக்வாண்டோ ஆகிய விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் கல்லூரி செல்லும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்கி பயிற்சிபெற விளையாட்டு விடுதி வசதிகள் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.16.27 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

## 12. ரூ. 25.00 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளியில் வானூர்தி பாவிப்பு மற்றும் .22mm துப்பாக்கி சுடுதல் பாவிப்பு நிறுவுதல்

தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் பயிற்சிக்காக சென்னை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் வானூர்தி பாவிப்பு நிறுவப்பட்டுள்ளது. மேலும், மாணாக்கர்களின் துப்பாக்கி சுடும் பயிற்சிக்கு .22mm ரக துப்பாக்கிகள் அத்தியாவசியமானதாகும். எனவே, திருச்சிராப்பள்ளியில் வானூர்தி பாவிப்பு மற்றும் .22mm துப்பாக்கி சுடுதல் பாவிப்பு ஆகியவை **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.25.00 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

**கே.ஏ. செங்கோட்டையன்**
பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்